# தலைப்பு 130 – அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 அபிப்பிராயம்

--------------------------

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே யூன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன்

இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சிற்கு உரித்தான அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானம் குறியீட்டின் கீழ் அனைத்து அரச கட்டிடங்களில் அறவிட வேண்டிய வீட்டு வாடகை, சுற்றுலா விடுதி / விடுமுறை விடுதிகள் / வணிகக் கட்டிடங்கள் / களஞ்சியசாலைகள் மற்றும் ஏனைய கட்டிடங்களில் பெறப்படுகின்ற வருமானங்களின் கூட்டுத்தொகையாக இருக்க வேண்டிய போதிலும் சம்பளத்தில் அறவிடப்படுகின்ற வீட்டு வாடகை மாத்திரம் இவ்வருமானக் குறியீட்டிற்குச் செலவு | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். குறிப்பிட்ட நிறுவனத்தினால் மாதாந்தம் அனுப்பப்படும் மாதாந்த வருமானப் பொழிப்புக்களின் மூலம் அரசின் கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைக்கான வருமானப் பிரிவுகளுக்கு வருமானம் செலவு வைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தவிர்ந்த அனைத்து நிறுவனங்கள் மேற்கண்ட வருமானப் பிரிவுகளுக்குரிய அனைத்து வருமானம், வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட்டது. இது தொடர்பான அரச நிதிக்கொள்கைத் திணைக்களத்திடம் பெறப்பட்ட | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மாத்திரம் அல்லாது இன்னும் நிறுவனங்களினால் அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானக் குறியீட்டிற்கு அனுப்ப வேண்டிய வருமானம் அக்குறியீட்டிற்கு செலவு வைக்கப்படாமையால் அவ் வருமானம் இந்த வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. எனினும், சுற்றுலா விடுதி / விடுமுறை விடுதிகள், சிற்றுண்டிச்சாலை வாடகை, அரங்க வாடகை போன்றவை ஏனைய வருமான குறியீடுகளுக்கு செலவு வைக்கப்பட்டமை 5 திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் பிரகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்காரணத்தினால் அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானம் மற்றும் நிலுவை வருமானத்தின் உண்மைப் பெறுமதி வருமானக் கணக்கில் குறிப்பிடப்படாமையினால் வருமானம் சேகரிக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தராக அவர் வருமானம் தொடர்பாக பின்தொடரலைச் செய்து வந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | அறிவுரைகளின் படி அத்திணைக்களத்தினால் விரிவான அறிக்கையொன்று அனுப்புவதாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டதுடன் அரச நிதிக்கொள்கை திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | வருமானத் தலைப்பின் கீழ் உள்ள கட்டிடங்களுக்கு அறவிடப்படுகின்ற வாடகைப் பெறுமதி எவ்வளவு என்பதை இனங்காண்பதற்கு அமைச்சினால் தரவுத்தள முறைமையொன்று | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். வருமானக் குறியீடு 20.02.01.01 இன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக அரசின் கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானம் சேகரிக்கப்படுகின்ற அனைத்து நிறுவனங்களும் உள்ளடங்கும் | தரவுத்தள முறைமை ஒன்று தயாரித்து கட்டிட வருமானங்களைச் சரியாகச் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேணப்பட்டிருக்கவில்லை. | வகையில் தரவுத்தள முறைமையொன்று பேணப்படுதல் நடைமுறையில் பொருத்தமற்றது. எனினும், தரவுத்தள முறைமையுடன் அரசின் கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைக்கான விபரங்கள் பெறப்பட்டு முடிந்தளவு மென்பொருளொன்று தயாரிக்கப்படுவதற்கு எமது அமைச்சினால் ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் முடிந்தளவு விரைவில் அரசிற்கு உரித்தான வருமானம் பெறப்படுகின்ற கட்டிடங்கள் அனைத்தும் தரவுத்தள முறைமைக்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் சரியாக மதிப்பிடப்படல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் தேறிய வருமானம் சேகரிக்கப்பட்டமை என்பவற்றுக்கிடையே ரூபா 64,574,426 அதிகமாக அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2020 இன் ஒதுக்கச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதில் தாமதம் ஏற்பட்டமையால் ஆரம்ப மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் கிடைத்ததா என்பதை அறிய முடியாது போனமையால் வருமான மதிப்பீடு திருத்தப்படுவதற்கு முடியாதிருந்ததுடன் நூற்றுக்கு 5.87 வீதத்தினால் வருமானம் அதிகமாக சேகரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானம் சரியாக மதிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 சனவரி 01 இல் மொத்த நிலுவை வருமானம் ரூபா 252,088,986 என்பதுடன் அதில் மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானமாக ரூபா 85,859,486 சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 39,107,705 ஆல் நிலுவை வருமானம் அதிகரித்திருந்தது. மேலும் மீளாய்வாண்டின் நிலுவை வருமானத்தில் அறவீடுகள் ரூபா 30,947,381 மட்டுமே ஆகும். இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் அதிகரிப்பதற்கு Covid 19 தொற்றுக் காரணமாக கைச்சாத்திடப்பட்ட வணிகக் கட்டிடங்களின் வாடகை (சிற்றுண்டிச்சாலை, களஞ்சியங்கள்) பெறப்படாமை பிரதான காரணமாக இருந்ததுடன் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த நிறுவனத் தலைவர்கள் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடந்த வருடங்களின் நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (i) | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் அறவிடப்படாத ரூபா 9,305,100 ஆன தொகை வனசீவராசிகள் நம்பிக்கை நிதியத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற சிற்றுண்டிச்சாலையின் அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானமாக இருப்பினும் 2020 திசெம்பர் 31 இல் வனசீவராசிகள் நம்பிக்கை நிதியம் கலைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். வனசீவராசிகள் நம்பிக்கை நிதியத்துடன் நேரடியாக நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானத்தை அறவிடப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரிய வரிசை அமைச்சின் செயலாளருக்கு 2021.03.09 | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆந் திகதிய கடிதத்தில் நிலுவை வருமானம் விரைவில் அறவிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரித்தான 04 அரச நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டிடங்களில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 33,465,869 ஆகும். | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். குறிப்பிட்ட நிலுவைத் தொகையை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வரிசை அமைச்சு செயலாளருக்கு அறிவித்துள்ளது. | பின்தொடரல்களை மேற்கொண்டு குறித்த நடவடிக்கை விரைவில் எடுக்கப்படல் வேண்டும |
| (iii) | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் ரூபா 70,862,646 அறவிட வேண்டிய மிகுதியை அறவிடுவதற்குச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் மீளாய்வாண்டில் ரூபா 45,984,311 ஆன மிகுதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2019.12.31 இற்கு முன்பிருந்து காணப்பட்ட ரூபா 70,862,646 ஐ அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 45,984,311 இருந்தமைக்கு Covid 19 தொற்றுக் காரணமாக வாடகை வருமானம் பெறப்படாமை, ஒப்பந்த மீறல் போன்ற காரணங்களாகும். | கடந்த வருடங்களில் நிலுவை வருமானம் அறவிடப்படல் மேற்கொள்ளப்பட்ட துடன் அந்நிலுவை வருமானத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட மையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | புடைவைகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். நிலுவை வாடகை தொடர்பாக சட்ட | நிலுவை வாடகை அறவிடுதல் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை வாடகை ரூபா 17,647,250 என்பதுடன் மீளாய்வாண்டில் நிலுவை வாடகை ரூபா 532,000 ஆகும். வாடகைக் காரரினால் ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகைப் பணம் வழங்கப்படாத காரணத்தினால் இந்நிலுவைத் தொகை ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதாகவும் புடைவைகள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் வருடத்தில் குறிப்பிட்ட நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ந்து செல்வதுடன் நிலுவை வாடகையை அறவிடுவதை விரைவுபடுத்தல் வேண்டும். |
| (v) | நாட்பட்ட மற்றும் சிறுநீரக நோய்களைத் தடுப்பதற்கான ஆராய்ச்சி செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரச மனைக்கு 2015 இலிருந்து 2020 வரையில் அறவிடப்படாத ரூபா 14,798,387 ஆனது நிலுவை மிகுதியாக இருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். நாட்பட்ட சிறுநீரக நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் சீடீ 85 ஆன அரச மனைக்காக அறவிடப்பட வேண்டிய வாடகை தொடர்பாக தொடர்ந்தும் சுகாதார அமைச்சிற்கு நினைவூட்டல்கள் அனுப்பப் பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சிற்கு அத்தொகையை விரைவில் செலுத்துமாறு 2021.03.16 ஆந் திகதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகையை அறவிடுதல் தொடர்பாக தொடர்ந்தும் பின்தொடரல்கள் மேற்கொள்ளப்பட்டு நிலுவை வாடகையை அறவிடுவதற்கு விரைவு படுத்தல் வேண்டும். |
| (vi) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த இரண்டு வீடுகளுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 36,042,000 | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த C-81 மற்றும் C-82 ஆகிய மனைகளுக்காக | பங்களா மனைக்கான நிலுவை வாடகையை விரைவில் அறவிடல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளடங்கலாக அமைச்சின் அரசின் பங்களா வீட்டின் நிலுவை வாடகை வருமானம் ரூபா 73,975,601 ஆகும். மீளாய்வாண்டில் இதில் ரூபா 1,694,344 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | ரூபா 36,042,000 ஆன வாடகை கடந்த காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு எமக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவைத் தொகையான ரூபா 13,614,000 ஐ விரைவில் செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான ரூபா 22,428,000 பெறுமதியை முடிந்தளவு விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

## 2.2 செலவு முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பத்து மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கங்களான ரூபா 1,800,000 சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். தேவைக்கேற்ப செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் 2020 ஆம் வருடத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமையினால் அலுவலகம் | ஏற்பாடுகள் செயற்திறனாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூடப்பட்டிருந்தமையினால் எதிர்பார்த்த செலவுகள் மேற்கொள்ளப்படாமையால் ஒதுக்கங்கள் சேமிக்கப் பட்டிருந்ததுடன் எதிர்வரும் காலங்களில் அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ஒவ்வொரு செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கங்கள் முழுமையாக பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | 44 செலவு விடயங்களுக்கான மொத்த தேறிய ஒதுக்கங்கள் ரூபா 9,655,210,000 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அச்செலவு விடயங்களுக்கான மொத்தச் செலவுகள் ரூபா 8,050,986,785 ஆகும். இங்கே பட்டதாரிப் பயிலுனர்கள் 60,000 பேர் ஆட்சேர்க்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டு வருடத்திற்குள் 45,000 பேர் மட்டுமே ஆட்சேர்க்கப்பட்டமை மற்றும் திட்டமிட்டவாறு செலவுகள் மேற்கொள்ளப்படாத | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். பட்டதாரிப் பயிலுனர்கள் 60,000 பேர் ஆட்சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் கொவிட் 19 தொற்று நிலைமையினால் வருடத்திற்குள் பயிலுனர்கள் 45,000 பேர் மட்டுமே ஆட்சேர்க்கப்பட்டமையால் எதிர்பார்த்த செலவுகள் செய்யப்படாமையால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டில் மிகுதி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | நி.பி 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

காரணத்தினால் மொத்த சேமிப்பின் அளவு ரூபா 1,604,223,214 என்பதுடன் இச்சேமிப்பு நூற்றுக்கு 15 வீதத்திலிருந்து நூற்றுக்கு 98 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கணக்கு குறிப்புக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பு (iii) இன் கீழ் காட்டப்பட வேண்டிய நிதிப் பிரமாணம் 14(1) இன் பிரகாரம் இணங்கிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 14,832,776 ஆன 83 விடயங்கள் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பு (iv) இல் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக உடன்பட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக அட்டுறு கணக்கு தயாரிக்கின்ற நியமங்களின் பிரகாரம் உடன்பட்டிருந்த ஏனைய அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பரிந்துரைக்கப்பட்ட குறிப்புக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய ஒதுக்கத்தை விஞ்சியதாக ரூபா 710,174 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்காக பின்னர் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு ஏற்படுவதால் நி.பி 94 ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய ஒதுக்கத்தை விஞ்சியதாக பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்ததுடன் எதிர்வரும் காலத்தில் இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. | நி.பி 94(1) இன் பிரகாரம் ஒதுக்கங்களை விஞ்சியதாக பொறுப்புக்களுக்கு உடன்படாமல் இருத்தல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயம் தொடர்பான சான்றுப்படுத்தல் செய்யப்பட வேண்டி இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும் அம்முறைமையின் பயனுறுதி தொடர்பாக அவ்வவ்போது | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ள போதிலும், அம்மீளாய்வு ஒன்று எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | |
| (i) 11 ஆவது அத்தியாயத்தின் 13.5 ஆம் பிரிவு | பதில் கடமையை நிறைவேற்றுவதற்காக மிகவும் பொருத்தமான உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் | இற்றை வரையில் I ஆம் தரத்திற்கான பதவியுயர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | கடமையை நிறைவேற்றுவதற்காக மிகவும் பொருத்தமான அலுவலர் நியமிக்கப்பட வேண்டியதுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்காகப் பெறப்பட்ட தகவலின் பிரகாரம் III ஆம் தரத்திலான 68 உத்தியோகத்தர்களுக்கு I ஆம் தரத்தின் பதில் கடமையை நிறைவேற்றுவதற்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | வருவதாக தெரிவிக்கப்பட்டது. பொருத்தமான உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் உரிய பதவிகள் மேலும் வெற்றிடங்களாக இருப்பின் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் பதில் கடமைக்காக ∴ கடமையை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட அனுமதி ஒவ்வொரு ஆண்டிலும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டு நீடிக்கப்படல் வேண்டும். | விரைவில் பதவி உயர்வு வழங்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |
| (ii) | XIX அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | அரச மனைகளில் ஒப்பந்தக் கால எல்லையை விஞ்சியதாக வசித்துக் கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 3 உத்தியோகத்தர் களிடமிருந்து அவ்வாறு தண்டப்பணம் அறவிடப்படவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். ஒப்பந்த கால எல்லையை விஞ்சியதாக வசிக்கின்ற அனைத்து உத்தியோகத்தர் களினதும் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் இந்த 6 உத்தியோகத்தர்களின் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு | தாபனக் கோவைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தேவையான நடவடிக்கை இற்றைவரையில் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் 891 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பிணைப் பதிவேடொன்று பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாகப் பிணைப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |
| (இ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | குடிமக்கள் சாசனத்தின் படி நிறுவனத்தினால் குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டிருக்கவில் லை | 2021 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் பிரிவிற்கு உரிய குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் வெளியிடப்படுவதற்கா ன நடவடிக்கை எடுப்பதாக 2021.01.26 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட்டு குறிப்பிட்ட பணியை முடிவிற்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குடிமக்கள் சாசனம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. |

## 2.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சேவையை விட்டு விலகிய 09 உத்தியோகத்தர்களின் ரூபா 995,768 மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 372,184 ஆன அறவிட வேண்டிய கடன் மிகுதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த அறவிட வேண்டிய மிகுதியின் கால வீச்சானது 02 வருடங்களிலிருந்து 04 வருடங்கள் வரையில் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்டதாகும். | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். ரூபா 104,976 ஆன கடன் மிகுதியின் ஒரு பகுதி அறவிடப்பட்டிருப்பதுடன் மிகுதி கடன் தொகை முடிந்தளவு விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூபா 109,244 ஆன கடன் மிகுதியொன்று பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு சனாதிபதிச் செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அறவிட வேண்டிய முழுமையான கடன் தொகையை அறவிடுவதற்கு அந்த உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்துகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் எதிரில் அவ்வாறு இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கடன் மிகுதியைத் | நிலுவைக் கடன் மிகுதி அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலுவைக் கடன் மிகுதிக்கு புதிதாகச் சேர்க்கப்படுதல் குறைக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர் விடுவிக்கப்படும் போது நிதிப்பிரிவிற்கு அறிவுறுத்தி கடன் மிகுதியை அறவிடுதல் தொடர்பான உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கான வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல் |

| | | |
|---|---|---|
| | தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | வேண்டும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

---

3.1 **வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்திட்டம் **(NLEAP-Canadian)** இற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் இலக்கம் 2509(13) ஆன செலவு விடயத்தின் கீழ் வெளிநாட்டு மானியம் ரூபா 5,300,000 மற்றும் அதற்கான இலக்கம் 2509(17) ஆன செலவு விடயத்தின் கீழ் உள்ளூர் நிதியத்தில் செலவிடப்படுவதற்கு ரூபா 1,350,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் முழுமையான தொகையும் சேமிப்பாக காட்டப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்விற்குப் பெறப்பட்ட தகவல்களின் படி இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் கனேடியன் டொலர் 1,991,672 அதாவது ரூபா 285,914,474 (2020.12.31-CAD 1=ரூபா 143.555) ஆனது நேரடியாக பெறப்பட்டிருந்ததுடன் அப்பெறுவனவு திறைசேரியூடாக பெறப்படாத காரணத்தினால் கணக்கிடப்படாமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். **NLEAP - Canadian** செயற்திட்டம் தேசிய மொழிகள் பிரிவுடன் தொடர்புபட்ட செயற்திட்டமாகும். தேசிய மொழிகள் பிரிவு இவ்வமைச்சிற்கு ஒன்றிணைக்கப்படுவதற்கு முன்னர் வேறு அமைச்சின் கீழ் பேணப்பட்டு வந்தபோது இந்த **NLEAP-Canadian** செயற்திட்டம் தொடங்கப்பட்டதுடன் கணக்கில் எடுக்கப்படாது பேணப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டது. செலவுத் தலைப்பு இலக்கம் **130** இல் இதற்கான ஒதுக்கம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட மானியம் செயற்படுத்தப்படுகின்ற நாட்டினால் நேரடியாக அம்மானியம் இலங்கையிலுள்ள **NLEAP-Canadian** செயற்திட்டத்தின் அலுவலகத்திற்கு | நேரடி மானியம் சரியாக மதிப்பிடப்பட வேண்டியதுடன் நேரடி மானியம் பெறுவனவு சரியான முறையின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணத்தால் திறைசேரியின் கணக்கீடு மேற்கொள்ளப்படவில்லை. இற்றைவரையில் இந்த அமைச்சு மற்றும் திறைசேரியினால் ஒன்றிணைந்து இது தொடர்பாக சரியாக கணக்கிலெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | |

## 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு சொந்தமான மஹியங்கனை, பொலநறுவை, மிகிந்தலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கதிர்காமம் மற்றும் மொனராகலை விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள காணிகளை கைப்பற்றுதல் அல்லது தீர்த்து வைத்தல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணியைக் கைப்பற்றுவதற்கு உரிய விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள காணிகள் மதிப்பிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அந்த விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள மாவட்டங்களின் மாவட்ட மதிப்பீட்டாளர்களுக்கு இந்தப் பணியை விரைவுபடுத்துமாறு அறவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த நடவடிக்கைகளை விரைவில் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள காணிகளை கைப்பற்றுதல் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 இழப்புக்களும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தீப்பிடித்தலுக்குள்ளான 23A சம்மேளன வீடு தொடர்பாக 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தும் நி.பி 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020.01.23 ஆந் திகதி பரிசோதனைச் சபையொன்று நியமிக்கப்பட்டது. இப்பரிசோதனைக்கான அறிக்கையை வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் பரிசோதனைச் சபைக்குத் தெரிவிக்கப்பட்டதுடன் அறிக்கை வழங்கப்படுகின்ற நடவடிக்கை தாமதமாவதால் விரைவில் குறிப்பிட்ட அறிக்கையைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக 2021.03.30 ஆந் திகதி மீண்டும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் அதற்கான மேற்கொண்ட நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | பரிசோதனைச் சபை நியமிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு அதிகமான காலம் கடந்து விட்டதால் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவ்வறிக்கையை வழங்குவது பரிசோதனைச் சபையின் பொறுப்பாகும். |
| (ஆ) | 2019 மார்ச் 17 ஆந் திகதி விபத்துக்குள்ளான வாகனமொன்று ரூபா 2,700,000 இற்குத் திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டு 2019 ஒக்டோபர் 30 ஆந் திகதியில் 7 மாதங்கள் கடந்திருந்தது. எனினும், 2020 திசெம்பர் 31 ஆந் | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2019 மார்ச் 17 ஆந் திகதி ஏற்பட்ட விபத்துக்குரிய சேதங்களின் திருத்தங்களுக்காக மதிப்பீடு வழங்குமாறு 2019.04.02 இல் என்.பீ மோட்டார் கராஜ் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியதுடன் | விபத்துக்களின் போதான வாகனத் திருத்தங்கள் காலதாமதமின்றி செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| திகதி வரையில் திருத்த வேலைகள் முடிவுற்று அமைச்சிற்கு வாகனம் கையளிக்கப்படவில்லை. | அந்நிறுவனத்தினால் மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாததால் 2019.08.07 இல் எல்.ஆர்.மோட்டர்ஸ் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உடன்படாமையால் இரு தரப்பினரதும் உடன்பாட்டின் பிரகாரம் 2019.10.30 இல் திருத்த வேலைகளுக்காக லியனகே மோட்டர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் திருத்த வேலைகளுக்காக காலமெடுக்கப்பட்டமை தொடர்பாக உரிய நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டதுடன் விபத்தினால் ஏற்பட்ட நட்ட இழப்பு பெரிய அளவு என்பதால் திருத்த வேலைகளுக்கு காலம் எடுக்கப்பட்டதாகவும் கொவிட் 19 தொற்று காரணமாக நிறுவனத்தின் வேலை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை மற்றும் மேலதிக பகுதிகள் வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்கள் என்பன காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 ஆம் ஆண்டில் நிர்வாக சேவையின் III ஆம் தரத்தில் நியமனம் பெற்று சுகாதார அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தர் 2008 ஆம் வருடத்தில் I ஆம் தரத்தின் பதவிக்கான கடமையை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தர் 2013 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II ஆம் தரத்திற்கு 2018 ஏப்ரலிலிருந்து சுகாதார, போசனை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2003.09.01 இல் இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் நியமனம் வழங்கப்பட்ட எம்.பீ.எல் றஹுமான் அவர்கள் 2004.09.01 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் சுகாதாரம், பாதுகாப்பு, போசணை மற்றும் ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தார். 2007 ஆம் வருடத்தில் அந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விசாரணை மற்றும் அவசர சிகிச்சை) பதவி வெற்றிடமாக இருந்ததுடன் I ஆம் தரத்தின் பதவி ஒன்று அப்பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்காக உதவிச் செயலாளர் எம்.பீ.எல். றஹுமான் அவர்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒப்புதல் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டார். | தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயம் 13.5 ஆம் பிரிவின் பிரகாரம் கடமையை நிறைவேற்று வதற்காக மிகவும் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்றை வரையில் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இடம் மாற்றலின்றி சுகாதார, போசனை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சில் கடமையாற்றுகின்றார். | | |
| (ஆ) | 2007 நவம்பர் 02 ஆந் திகதியிலிருந்து 2010 யூலை 20 வரையில் இலக்கம் 8A மனையில் எவரும் வசிக்காத காலப்பகுதிக்காக ரூபா 228,976 ஆன மின்சாரப் பட்டியலொன்று பெறப்பட்டமை தொடர்பில் இந்நிலைமை இற்றைவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எவரும் வசிக்காத காலப்பகுதிக்காக கணக்கிடப்பட்ட இத்தொகை தொடர்பில் மீண்டும் பரிசோதிக்கப்பட்டு சரியான அறிக்கையொன்று அனுப்புமாறு 2017.11.07 இல் இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன் இற்றைவரையில் குறித்த அறிக்கையை இவ்வமைச்சிற்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் நினைவூட்டல் கடிதமொன்று அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | குறித்த பிரச்சினை விரைவில் தீர்க்கப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 173 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட மட்டத்தில் 2 | வெற்றிடங்களான பதவிகளை நிரப்புவதற்கு பதவி உயர்வின் மூலம் தகைமைகள் கொண்ட உத்தியோகத்தர்களை நியமித்தல் தொடர்பான நடவடிக்கை மற்றும் | வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகள் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட பதவிகளாகும். அதன் பிரகாரம் 171 வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்புத் தொடர்பான நடவடிக்கை குறிப்பிட்ட சேவைப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும். | திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மேலதிக எண்ணிக்கை 24 என்பதுடன் அப்பதவி எண்ணிக்கைகளை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சனாதிபதி அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அரச நியமனம் வழங்குவதற்கான குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி பதவிகள் அங்கீகரிக்கப்படும். | மேலதிகப் பதவிகளுக்கான எண்ணிக்கைக்கு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |